ஸ்ரீ காமாக்ஷியம்ம...

# THE REPORT

## YAGA KSHATRIYAS

## 3rd Conference,

VIRUDUPATTI

24-மனையார்

தெலுங்க செட்டியார்களென்னும்,

யாகக்ஷத்திரியர்

# 3-வது மகாநாடு

நடவடிக்கைகளும்

# தீர்மானங்கள்

விருதுபட்டி.

**1923**

விருதுபட்டி, ஸ்ரீமான்
இராமலிங்கக் குருக்களவர்களது
சச்சிதானந்த அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

16 APR 1923

ஓம்:

ஸ்ரீகாமாக்ஷியம்மன் துணை.

TELUGU CHETTIARS' OF YAGA KSHATRIYAS,

# SOCIAL THIRD CONFERENCE

VIRUDUPATI.

24-மனையார்களாகிய

தெலுங்க செட்டியார்களென்னும்,

## யாகக்ஷத்திரியர் 3-வது கான்பரென்ஸ்

விருதுபட்டி.

துந்துபி௵ தை௴ 15, 16, 17-தேதிகளாகிய,

1923-௵ ஜனுவரி௴ 28, 29, 30உ

ஞாயிறு, திங்கள், செவ்வாய் நாட்களில்,

விருதுபட்டியில் கான்பரென்ஸ் நடைபெற்றதின்

## நடவடிக்கைகள்.

சபாநாயகர்: மகா-௱-௱-ஸ்ரீ

**T. தனுக்கோடி செட்டியாரவர்கள்**

கவர்ன்மெண்ட் ஸ்கூல்மாஸ்டர், குல்பர்க்கா.

உபசரணைக் கமிட்டித் தலைவர்,

மகா-௱-௱-ஸ்ரீ

M. கந்தசாமி செட்டியார்

டிஸ்டிரிக்ட்போர்டுமெம்பர்& யூனியன்சேர்மேன்; சங்கரன்கோவில்

## உபசரணைக்கமிட்டி உதவித் தலைவர்கள்.

ம-ா-ா-ஸ்ரீ K. கந்தஞ் செட்டியார்,
திருப்பரங்குன்றம் பொதுமை மடாலய தர்ம காரியஸ்-
தர்; விருதுபட்டி.

" S. சொக்கலிங்கஞ் செட்டியார்,
சாவுக்கார்; போடிநாயக்கனூர்.

" V. சங்கரலிங்கஞ் செட்டியார்,
தமிழ் வித்வான்; மானுமதுரை.

## காரியதரிசி.

" R. P. அழகிரி செட்டியார்,
ஜவுளி வியாபாரம்; விருதுபட்டி.

## உதவி காரியதரிசிகள்.

" P. A. சின்ன ராமய்ய செட்டியார்,
முதலாளி; இலுப்பையூர்.

" K. கோனையா செட்டியார்,
ஹரிஹரன் பஜனை தர்மகர்த்தா; மறவர்பெருங்குடி.

" N. பெத்து செட்டியார்,
பகவதியம்மன் கோவில் மானேஜர்; வடுகபட்டி.

" P. கணபதி செட்டியார்,
நெல் வியாபாரம்; சின்னுளபட்டி.

## தலைமை பொக்கிஷதார்.

" தெ. சு. கருப்பஞ் செட்டியார்,
சாக்குமண்டி; விருதுபட்டி.

## உதவி பொக்கிஷதாரர்கள்.

" கொ. பெ. தேவராண்டி செட்டியார்,
ஜவுளி வியாபாரம்; விருதுபட்டி.

" தெ. ச. க. சுப்பன் செட்டியார்,
சாவுக்கார்; விருதுபட்டி.

## தொண்டர் படை.

" எதிராஜலு செட்டியார்,
ஸ்கவுட் மாஸ்டர்; மதறாஸ்.

" K. K. கோட்டராமன் செட்டியார்,
வாலண்டியர் கேப்டன்; விருதுபட்டி.

## கான்பரென்ஸ் ஆர்க்கனைஷர்.

" வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியார்,
குலாபிமானி; கோயமுத்தூர்

# 3-வது மகாநாட்டின் மகத்துவம்

## கான்பரென்ஸ் ஹால்

இவ்வூரிலுள்ள சுப்பிரமணிய ஸ்வாமி கோவில் பேட்டையில், பெரியகொட்டகை யேற்படுத்தி சுமார் இரண்டாயிரம் மெம்பர்கள் வீற்றிருக்கும்படியாக நாற்காலிகளும், பெஞ்சுகளும், போட்டப்பட்டு கொட்டகையை அலங்கிர்தம் செய்து, சிங்கக் கொடிகளையுடைய பரவட்டாக்கள் கட்டி, தூண்களில் நீதிவாக்கியங்களுடைய போர்டுகள்மாட்டி, நிலைக்கண்ணாடிகளும், குளோப்புகளும் அமைத்து, கதலிக்கம்பங்களால் அலங்கிர்தம் செய்யப்பட்டிருந்ததன்றி முதல்கேட்டின் முன்புறம் பெரிய வெல்கம் ஆர்ச்சுகளும் அழகாய் அமைக்கப்பட்டிருந்தது தவிர றயில்வேஸ்டேசனிலிருந்து கான்பரென்ஸ் ஹாலுக்கு வரும் ரோட்டிலும், மெம்பர்கள் தங்கும் விடுதிகளுடைய ரோட்டுகளிலும் (பெரிய கமான்) வெல்கம் ஆர்ச்சுளும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன.

## போஜனசாலை

இவ்வூர்கடை வீதியிலிருந்து றயில்வேஸ்டேசனுக்கு போகும் ரோட்டில் கபி. ச. கம்பவுண்டில் ஏககாலத்தில் ஒரே பந்தியில் 400 பேர்கள் வீற்றிருந்து சாப்பிடும் படியாய் பெரியகொட்டகையும் அதேகம்பவுண்டில் சமையல் விடுதியும், மற்றோர்பக்கம் சாமான்கள் வைக்கும் விடுதியும் அமைத்து, கேட்டில் முன்புறம் கொடி பறந்துகொண்டிருப்பதும், வாழையிலைகள் அசைந்து கொண்டிருப்பதும் மெம்பர்களை உண்ண வாருங்கள், வாருங்கள் என்று அழைப்பது போல் தோன்றின.

## விடுதிகள்

கான்பரென்ஸ் ஆபீஸ்:—ஸ்ரீகாமாக்ஷிவிலாஸ வாசகசாலையும், சபாநாயகர்விடுதி.- தெ. ச. க. சுப்பஞ்செட்டியார்மாடிக்கட்டிடத்தையும் ரிஷப்ஷன் மெம்பர்கள்விடுதி:— கோ. தனுக்கோடி செட்டியார் கிட்டங்கியையும், டெலிகேட் மெம்பர்கள் விடுதி;— தெ. சு. கருப்பஞ் செட்டியார் கிட்டங்கியையும், வாலண்டியர்கள் விடுதி:— அ. கணபதிசெட்டியார் கிட்டங்கியையும், இன்னும்சில விடுதிகளையும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## தொண்டர்படை

மதராஸிலிருந்து வந்த Y. M. S. அசோஷியேஷன் வாலண்டியர்களின் ஸ்கவுட் மாஸ்டர் (ரிஜிஸ்டரானது) எதிராஜுலு செட்டியார் இங்கு விஜயமானபின் இவ்வூர் வாலண்டியர்களுக்கு வேண்டிய சாதனங்களைப் பழக்கி வைத்து கான்பரென்ஸ் கூடும் முதல் நாளிலிருந்து முடிந்த மறுநாள் வரையிலும் அவர்களே சீராய் நடத்திய காக்ஷியைக் கண்ணுலும் கண்டவர்கள் எந்நாளும் மறவார்கள்.

---

சபாநாயகர் குல்பர்க்காவிலிருந்து விருதுபட்டிக்குவிஜயஞ்செய்து தங்கியிருக்கும் விடுதியினின்று, 1923-ஞு ஜனவரிமீ 28உ ஆதிவாரம் பகல் 2-மணிக்கு கான்பரென்ஸ் ஹாலுக்கு எழுந்தருளும் போது உபசரணைக் கமிட்டிக் காரியதரிசியால் வாசிக்கலான,

# வரவேற்புப் பத்திரம்.

—:*:○:*:—

நமது வழிபடு கடவுளாகிய ஸ்ரீகாமாக்ஷி தேவியின் திருவருளை முன்னிட்டு கோவைக்குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியார் தன்னலங் கருதாது நம்மவர்கள் வசிக்கும் ஒவ்வோர் கிராமங்கள் முதலாகச் சென்று குலதர்மத்தைப்புகட்டி உடல், பொருள், ஆவி மூன்றையும் நம்மவர்களுக் கர்பணஞ்செய்து ஜாதி முன்னேற்றத்தைக்கருதி ஊழியமசெய்துவந்த பயனுல் 1919-ஞு செப்டம்பர்மீ 6உ 7உ-களில் கோயமுத்தூரில் பல மேதாவிகளின் பொருளுதவியாலும், சகாயத்தினுலும் நமது கான்பரென்ஸ் முதன்முதல் தஞ்சையில் வசிக்கும் தவலையவார் கோத்திரம் ஸ்ரீமான் T. A. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்களின் அக்கிராசனத்தில் நடைபெற்றது. அதன்பின் 1920-ஞு அக்டோபர்மீ 30உ 31உ களில் மதருஸ் வாசிகளின் முயற்சியால் காஞ்சீபுரத்தில் இரண்டாவது மகாநாடு கோயமுத்தூரில்வசிக்கும் நலிவிரிவார் கோத்திரம் C. K. பழனிச்சாமிசெட்டியார் அவர்கள் அக்கிராசனத்தில் நடைபெற்றது நம்மரபினர்கள் யாவரும் அறிந்தவிஷயமே.

நமது மகாசங்கமானது வெள்ளியங்கிரியின் கீழ்பாலுள்ள கோயமாநகரில் முளைத்துத் தழைத்தோங்கி, சென்னைமா நகரம் வரையில் கொடிபடர்ந்து, நமது குலதெய்வமாகிய ஸ்ரீ காமக்கோட்டம்பிகையின் அர்ச்சனைக்காக காஞ்சிமாநகரில் பூபூத்து: தென்னாடாகிய இந்நாட்டிலுள்ள 167 கிராமவாசிகளாகிய நம்மனோர்களும் பலதேசங்களிலிருக்கும் நம்மரபினராகிய வண்டுகள் வந்துசேர்ந்து ஆனந்தத்துடனும், அமைதியுடனும் அருந்துவதற்குத் தலைமையாக ஒரு ப்ரமரத்தைக் கண்டெடுத்தோம்.

தமிழ்நாடாகிய தஞ்சைமா நகரித்தில் பரம்பரையாய் வாழ்ந்து வந்து முதன்முதல் பல்லாரியில் குடியேறிய வம்சத்தில் தோன்றி ரெஜிமெண்டில் சௌகாராயிருந்த ஹரிகுலரிஷி கோத்திரம் கனம் கந்தசாமி செட்டியாருக்கு ஐந்தாவது புத்திரராய்ப்பிறந்து இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, பயின்று மேநாடுகளும் சுற்றுப்பிரயாணம் செய்து ஹைதராபாத் முனிசிபல் ஸ்கூல்ஸ் இன்ஸ்பெக்டராகவும், ஹிஸ் எக்ஸலென்ஸி தி மகாராஜா ஸர்க்கிஷன் பர்ஷாத் பகதூர், ஜி. ஸி. ஐ. இ. உடைய அரண்மனை சூப்ரென்டெண்டாகவும், இப்போது குல்பர்க்காவில் ஹைஸ்கூல் மாஸ்டராகவும் இருந்துவருபவரும், முதல் மகாநாட்டில் பிரதம உபந்நியாசகராய் சபையை அலங்கிர்தம் செய்தவருவான ஸ்ரீமான் T. தனுக்கோடி செட்டியாரவர்களே தகுந்தவரென்று ஏற்பட்டபடியால், அன்னவரையே இப்போது நமது மூன்றாவது மகாநாட்டிற்கு அக்கிராசனராக வரவேற்புச்செய்து கான்பரென்ஸ் ஹாலுக்கு அழைத்துச் செல்ல சித்தமாயிருக்கிறோமாகையால் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் அங்கிகரித்து விஜயஞ்செய்து சபையை அலங்கரித்து மகாநாட்டை நடத்தி நமது கோரிக்கைகளை ஈடேற்றி வைக்குமாறு நாம் எல்லோரும் அவரை வந்தனத்துடன் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். சுபம்!

## சபாநாயகர் கான்பரென்ஸ் ஹாலுக்கு விஜயம்.

நமது சபைத்தலைவர் தங்கியிருக்கும் விடுதிக்கு உபசாரணைக் கமிட்டி மெம்பர்களும், மகா நாட்டிற்கு விஜயம் செய்திருந்த மெம்பர்களும், போயிருந்து வரவேற்று, மோட்டார்காரில் வாத்திய

கோஷ்டியுடன் காசுக்கடை தெருவின் வழிபாய் சென்று ரதவீதி முழுவதும் யானையானது முன் வழிகாட்டவும், வாலண்டியர்கள் அணிவகுத்துச் செல்லவும், மெம்பர்கள் கும்பல் கும்பலாய் கூடி வரவும், ஹரிதுவஜம் விருதுகள் முதலானதுகளுடன் பவனிவந்து கான்பரென்ஸ் ஹாலுக்கு விஜயம்செய்த வைபவமேவைபவம்.

---

# மகாநாடு ஆரம்பம்

## வாழ்த்துக் கவிகள்.

நடுப்பாளையம்,

### N. பெத்தி செட்டியா ரவர்கள் இயற்றிய

எழுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தங்கள்.

முத்துக ளிலங்குங் கோயமா நகரின் முதலவை நடைபெறச் செய்து
சத்துக ளிலங்குங் கச்சியம் பதியிற் சத்திகா மாட்சிதன் னருளாற்
கொத்துகளிலங்குந் தன்றலத்திரண்டாங் குழுவினைக்கூட்டியிவ்வாண்டிற்
சித்துக ளிலங்க விருதுபட் டியினிற் சீர்பெற வமைத்தன னன்றே.

உலகெலா மீன்ற வன்னைகா மாட்சி யுபயதாண் மலரினைக் கருதி
னிலகிவாப் பொருளு மெளிதினி லெய்து மினிவரா வீடது வாமாற்
கலகெலா மகற்றிச் சிந்தனை செய்மின் கலியுகக் கொடுமையின் மீட்பக்
குலமெலா முண்மை நெறிகொள வொன்றிக் குலவுசீ ரெய்திட லாமே.

---

மதராஸ் கன்னல்மொழி பௌராணிகர்

### S. K. அங்குசாமி செட்டியாரவர்களா லியற்றிய

## ஸ்ரீ காமாக்ஷியம்மன் துதி.

(அம்மாவாணியே என்ற வர்னமெட்டு.)

காமாக்ஷி யம்மையே காத்தாளு மெம்மையே
காதலித்தோம் பாதந்தன்னை நாளுமும்மையே
சாதுகுல வம்ஸமே தழைத்து வோங்கவே
மாதுதேவி பாதமதை மகிழ்ந்து போற்றினேம்

காஞ்சிபுரியில் களிக்குந் தேவியே
வாஞ்சையோடு பிரிதிவீச்சுர மைந்தர் போற்றினேம்
மங்களமாகநீர் யெங்களைக் காரும்
அங்குசாமிக் குன்றனருளை யன்பாற் றாருமே.

---

# வந்தனோபசாரப் பத்திரம்,

நமது 3-வது மகாநாட்டின் உபசரணைக் கமிட்டியாரால் தயாரித்த வந்தனோபசாரப் பத்திரத்தை, M. கந்தசாமி செட்டியாரவர்களால் வாசிக்கப்பட்டது. அதன் கருத்தாவது:—

கான்பரென்ஸின் பயன்:— வெகு காலத்திற்குமுன் நம்முன்னோர்கள் பிரிந்துபோய் வாழ்ந்து வந்திருந்தாலும், இப்போது நமது மகாகாட்டின் மூலமாய் கூடி வாழ்நதுவரச் செய்தது முதற் பயன்.

கல்வி:— நம்மவர்களுக்கு கல்வி முக்கியமாய் வேண்டியிருப்பதால் முதல் கான்பரென்ஸ் தீர்மானத்தைக்கவனித்து பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்பது.

தொழிற்சாலை:— நமது வம்சத்தில் ஏழைகளுக்கும், பெண்களுக்கும் நமது நாட்டுக் கைத்தொழில் செய்யும்படியாக இரண்டாவது மகாநாட்டின் தீர்மானத்தை அனுசரிக்க வேண்டுமென்பது.

பத்திரிகை:— நவீன நாகரீக மடைந்துவரும் இக்காலத்தில் ஒவ்வோர் ஜாதியாருக்கும் தனிப்பத்திரிகை இருந்துவருவதுபோல நம் ஜாதிக்கும் பத்திரிகை இருக்கவேண்டுமென்பது.

சட்டசபை:— நமது வம்சத்தார் பெருந்தொகையா யிருந்தும் நம்மவரில் யாராவதொருவர் சட்ட சபையில் ஸ்தானம்பெற வேண்டுமென்பது.

நிர்வாக சபை:— நமது கான்பரென்ஸை சீராய்நடத்தி கல்வி நாகரீகம், ஒற்றுமை, கைத்தொழில் முதலியவைகளை ஏற்படுத்த ஓர் நிர்வாக சபை இருக்கவேண்டுமென்பது.

உப சங்கங்கள்:— நமது மகாசங்கத்தை அனுசரித்து பலபாகங்களிலும் உபசங்கங்கள் இருக்கவேண்டுமென்பது.

மாதர் மகாநாடு:— புருஷர்களாகிய நாம் இந்த மூன்று கான்பரென்ஸ் மூலமாய் ஐக்கியப்பட்டது போல் நமது மாதர்களும் இவ்வித சம்பவங்களில்கலந்து அவர்களும் ஒருவர்க்கொருவர் அறிமுகமாக வேண்டுமென்பது. இதனால் திருமாங்கல்யதாரண பேதம் விதவாவிவாகம் இவைகள் லெகுவில் முடிவடையும்.

நல்லொழுக்கம்:— நமது ஜாதியில் பண்டைக் காலம் முதல்கொண்டு மதுமாம்ச மில்லாதிருந்து வந்ததில் எக்காரணங் கொண்டோ சிலர் புலாலருந்துவதாய் தெரிவதால் அதையும் நீக்கவேண்டுமென்பது.

ஜாதியின் பெயர்:— நமக்கு பல பெயர்க ளிருந்து வருவதை யகற்றி இயற்கையாயுண்டான பெயரை ஜாரிக்குக் கொண்டுவர வேண்டுமென்பது.

நன்றி:— நமது கான்பரென்ஸை முதன்முதல் கூட்டிவைத்த குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியாருக்கு நாமெல்லோரும் நன்றி பாராட்டுவோம்.

## சபாநாயகர் முன்னுரை

நமது 3-வது மகாநாட்டின் சபாநாயகரவர்களின் முன்னுரையில் கண்டிருக்கும் விஷயங்களெல்லாம் உபந்நியாசகர்கள் தெளிவாய்க் கூறியிருப்பதாலும், தலைவர் முடிவுரையில் விஸ்தாரமாயிருப்பதாலும், அவற்றை இங்கு குறிப்பிடவில்லை.

---

## 2-வது மகாநாடு வரவு செலவு

மதுரூஸ் வாசிகளால் நடத்திவைத்த நமது இரண்டாவது கான்பரென்ஸில்செலவானது 1873—6—0 ரூபாய் அதற்குவரவு 1791—12—0 இதில் அதிகசெலவான 81—10—0 ரூபாயும், மதுரூஸ் Y. M. S. அசோஷியேஷன் மெம்பர்களின் பொறுப்பில் முடிந்தது மகாநாட்டிற்கு விஜயம் செய்ய சவுகரியமில்லாத கனவான்கள் அனுப்பிய தந்திகளும் கடிதங்களும் வாசிக்கப்பட்டது.

### கல்வி.

மானாமதுரை தமிழ் வித்துவான் V. சங்கரலிங்கஞ்செட்டியார் பலதிருஷ்டாந்தங்கள் சுருங்கச்சொல்லி விளங்கவைத்து உபந்நியாசம்செய்தார். இவற்றை S. K. அங்குசாமிசெட்டியார் ஆமோதித்துப் பேசினார் இவரது கன்னல் மொழியனைக்கேட்ட பலருக்கு இனிமையாகவே இருந்தது.

### ஒற்றுமை.

நடுப்பாளையம்:— N. பெத்திசெட்டியார் எழுதியனுப்பிய ஒற்றுமையென்னும் விஷயத்தை கோயமுத்தூர் T. குப்புசாமிசெட்டியார் வாசித்தார். C. K. பழனிச்சாமி செட்டியாரும் இது விஷயம் ஆமோதித்துப் பேசினார், இவர் ஆங்கிலகவி சேக்ஸ்பியர் நூலிலுள்ள திருஷ்டாந்தங்களையும் சுட்டிக்காட்டினார்.

### ஆசாரம்.

காமேகவுண்டன்பட்டி மிராசுதார் P. அருணாசலஞ் செட்டியார் இவ்வரியபெரிய விஷயத்தை வெகு உருக்கமாகவும், நம்ஜாதி முன்னேற்ற மடையும் வழியையும், இப்போது 167-கிராமங்களிலுண்டான குறைகளையும் அவற்றைத் திருத்தும்வழியையும் உபந்நியாசஞ் செய்தார்.

இவற்றை போடிநாயக்கனூர் ஜவுளிக் கடை K. ராமசாமி செட்டியார் பலமேற்கோள்களுடனும், திருக்குறளிலுள்ள நீதியை விளக்கிக் காட்டியும், நம் ஜாதி இனி முன்னேற்றமடைய வேண்டியதையும் தெளிவாக ஆமோதித்துப் பேசினார்.

---

## 29—1—23 திங்கள் (இரண்டாம் நாள்) காலை.

# வந்தனோபசாரப் பத்திரம்.

### குலபிராட்டியார் வணக்கம்.

அன்றுபுரி வேள்வியினின் றவதரித்த ஸ்ரீதீசு வரன்பின் னன்பாய்த்
தோன்றுதொட ரானயிரு பன்னான்கு மனையார்கள் சுயம்புக் கூட்டம்
ஒன்றுதிருக் கோவைநக ருபகாஞ்சி விருதையிதி லிரண்டோ டொன்று
என்றுமொரு கோடிபெற ஈன்றருளே காம்பிகையை யிதயஞ் சேர்ப்பாம்.

சங்க வாழ்த்து.

மகத்துற்ற பிரிதிவீசன் வமிசர்கள் சமுதாயங்கள்
மகத்துவம் பெருகவுங்கா மாக்ஷியி னருள்முன்னிட்டே
யுகத்துள வரைக்கும்நல்ல வுயர்திதி யுடையோராக
இகத்திலும் பரத்திலும்நல் யிதத்துடன் வாழ்கமாதோ.

## நமஸ்காரம்.

ஐயன்மீர்! நம் மகாநாடு, முதல் கோயமுத்தூரிலும், இரண்டாவது பிராட்டியா ருடைய சன்னிதானத் திருக் காஞ்சியிலும், மூன்றாவது முருகன் பரங்குன்றம் பொதுமடாலய காரியதரிசிகள் வாசஸ் தலமாகிய இவ் விருதுபட்டியின்கண் கூட்டிவைத் திருப்பதை யேற்றிப் போற்றத் தக்கதே.

ஆதலாற் குலாபிமானத்தைத் தழுவி பாடசாலைகள் உலவச் செய்து வறியோர் முதல் தத்தம் சிறுவர் சிறுமிகளைக் கற்கச்செய்வதின் பயன் குக்கிராமங்களிலுங்கூட இனவுறத்துடன் ஐஸ்வர்யவா னாகி தனதான்ய சம்பத்தும்பெருகி மனைவி மக்களுடன் மருவி, இயாக க்ஷத்திரிய ரென்னும் நாமம் படைப் பெயர்க்கு யோகபோக மிரண்டுங்கதித்து ஊழிஊழியும் வாழி வாழியே.

ஹரி ஹர பஜனை மடாதிபதி,
கோ. கோனைய்யா செட்டியார் தருமகர்த்த,
மறவர்பெருங்குடி.

---

## திருமாங்கல்ய தாரண பேதம்.

கோயமுத்தூர் முனிசிபல்கவுன்சிலர், பஞ்சாயத்துக்கோர்ட் பிரசிடெண்டாகிய C. K. பழனிச்சாமி செட்டியார் நம்மவர்களில் தாலியும்பொட்டும் இருந்துவரக்கூடியகாரணம் இன்னதென்பதை நன்கு தெரியவேண்டு மென்றும், இவ்வித வித்தியாச முண்டானதல்லாமல் மாங்கல்யம் தாரணம் செய்வதிலேயுங் கூட வித்தியாச மிருக்கிறதென்றும், இந்த சப்ஜெட்டானது கான்பரென்ஸில் பய்லில் இருப்பதால் சிலர் இவ்வித மகாநாடுகளுக்கு வருகிறதில்லை யென்றும, ஆகையால் இதை பய்லிலிருந்து எடுத்துவிடுவது நல மென்றும் உபந்யாசம் செய்தார்.

இவற்றை ஆமோதித்து S. K. அங்குசாமி செட்டியாரும், கோவைக் குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியாரும் பேசியதை சபாநாயகரவர்கள் இவற்றை மறுத்துப்பேசி இந்த சப்ஜெட் பய்லில் இருக்கவேண்டு மென்பதாய்க் கூறினர்.

### ஜாதியின் பெயர்.

உடுமலைப்பேட்டை சரபம் முத்துச்சாமிக் கவிராயரவர்கள் நமது ஜாதியின் பெயர் என்னும் சப்ஜெட்டே இருக்க வேண்டிய தில்லையென்றும், முதல் கான்பரென்ஸிலும் இந்த மூன்றுவது கான்பரென்ஸிலும் நடைபெற்றுவரும் பெயரே சரியான தென்றும் உபந்நியாசம் செய்தார். இவற்றை ஆமோதித்தவர், C. K. பழனிச்சாமி செட்டியார்.

---

## பிற்பகல்.

### பத்திரிகை.

விருதுபட்டி K. சந்தஞ் செட்டியார் பத்திரிகை என்னும் விஷயத்தைப்பற்றி யேனைய ஜாதியார்களுக்கும் அவரவர்களின் ஜாதி முன்னேற்ற விஷயமாய் பத்திரிகை யிருப்பதுபோல் நமது ஜாதிக்கும் தனிப்பத்திரிகை யிருக்கவேண்டுமென்று உபந்நியாசம் செய்தார்.

இவற்றை ஆமோதித்தவர், மதராஸ் கலியுக வர்த்தமானி பத்திராதிபர் T. முத்துச்சாமி செட்டியார் தனது அனுபோகத்தால் தெளிவாய்க் கூறினர். தவிர, நமது ஜாதிக்கு தனிப்பத்திரிகையையும், கலியுக வர்த்தமானியையும் நம்மவர்கள் ஆதரிக்க வேணுமென்று குலாபிமானி கூறினர்.

### சட்டசபை மெம்பர்.

போடிநாயக்கனூர் ஜவுளிக்கடை K. ராமசாமி செட்டியார் நமது ஜாதியார்கள் சென்னை மாகாணத்தில் பெரும்பாலோர்கள் இருந்தும் நமக்குண்டான விஷயங்களை எடுத்துப்பேச சட்டசபையில் ஒருவர் நம்மவரே இருக்கவேண்டுமென்று உபந்நியாசம் செய்தார். இவற்றை ஆமோதித்தவர் T. முத்துச்சாமி செட்டியார்.

## விதவா விவாகம்

மதுரூஸ்கூலை ஜவுளிவியாபாரம் M. வெங்கிட்டராமையசெட்டியார் விதவைகளின் மறுமணத்தைப்பற்றி தெலுங்கில் வெகுநேரம் உபந்நியாசம் செய்தார் அவற்றின் கருத்தாவது நமது வம்சத்திற்கு விதவாவிவாகம் கூடாதென்பதும், விதவைகள் மட்டுப்படவேண்டுமானால் பாலிய விவாகத்தை நிறுத்தவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினார்.

இரண்டாவதாய் பேசியவர் கோவைக்குலாபிமானி, உபந்நியாசகர் கூறியவற்றில் முதலாவது உண்டான விதவாவிவாகத்தை மறுத்து பேசியதின்கருத்து புருஷசம்போகமடையாத பாலியவிதவைகள் தன்னைத்தான் அறிந்தபின் அவளது சம்மதத்தின் பேரில் சாஸ்திரீகமாய் விவாகம் செய்யலாமென்றும், புருஷ சம்போகமடைந்தபின் மக்களைப்பெறாத விதவைகளுக்கு புனர்விவாகம் செய்யலாமென்றும், குழந்தைகளையுடைய விதவைகளுக்கு மறுமணங் கூடாதென்றும் கூறினார்.

## கைத்தொழில்

மதுரூஸ் கன்னல்மொழி பௌராணிகர் S. K. அங்குசாமிசெட்டியார் தொழில்விஷயத்தைப்பற்றிய சங்கதிகள்முழுமையும் உபந்நியாசம் செய்தார். அவற்றின் சுருக்கமாவது:- நம் ஜாதியார்களில் அநேகர் ஏழைகளாயிருப்பதால் அவர்களுக்கு பல பக்கங்களில் உள்நாட்டுக் கைத்தொழில் செய்யக் கூடிய சாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்றும், பெண்கள்வெளியில்போய் வேலைசெய்யாதிருக்க, வீட்டிலேயே யிருந்துகொண்டு செய்யும்படியான நூல்நூற்றல், பின்னல் முதலானவேலைகளை செய்யும்படி யேற்பாடு செய்யவேண்டுமென்றும் உபந்நியாசம் செய்தார்.

மாலை 5-30-மணிக்கு புகைப்படம் எடுக்கப்பட்டது.

## 30—1—23 (மூன்றும் நாள்,)

# நிர்வாகசபை

## கோவைக் குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியார் உபந்நியாசம்

நாம் வெகுகாலத்திற்கு முன் அரசுரிமையிழந்து பலதேசங்களுக்கும் சிதறிப்போய் குடியேறி வாழ்ந்து வந்தோம். அதன்பின் அம்பிகையின் அனுக்கிரகத்தால் முதல் காங்பரென்சால் ஒருங்கு சேர்ந்தோம் அதுமுதல் இத்துடன் மூன்று காங்பரென்சுகளாகியும் ஓர் நிர்வாகசபை ஏற்படுத்தாமல் இருந்தோம் இவற்றில் நமது மகாசங்கத்தை நிர்வகித்துவரும் ஓர் கமிட்டி ஏற்படுத்தி கவர்ன்மெண்ட் ஆக்ட்டுப்படி ரிஜிஸ்த்தர்செய்து. நமது ஜாதிமுன்னேற்றமடையும் வழிகளில் முக்கியமாயுள்ள கல்வி, கைத்தொழிலை விர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. இந்தமூன்றுமகாநாடுகள் கூடியதில் பலதேசவாசிகள் ஒருங்கு சேர்ந்தோம் இனிநமது முக்கியகோரிக்கைகள் ஈடேறவேண்டுமானால் மூலதனம் அவசியம் அதனை சேகரிக்கவும் சேர்ந்ததைபாதுகாக்கவும், அவற்றைபொது விஷயமாய் உண்டான வழிகளில் செலவு செய்யவும் வேண்டியே நிர்வாக சபை ஒன்றிருக்க வேண்டியது முக்கியமானதாய் இருக்கிறது இச்சிறியேனுடைய அபிப்பிராயம். இச்சபைக்கு உத்தியோகஸ்தர் 11-பேரும், இந்த பதினொரு மெம்பர்களுடன் 20-மெம்பர்கள் கூடி மானேஜிங்கமிட்டியார் 31-மெம்பர்களும் இந்தமுப்பத்தொரு மெம்பர்களுடன் 70-மெம்பர்கள்கூடி ஜெனரல்பாடி மெம்பர்கள் 101-வராக இச்சபைக்குநியமித்து நமதுஜாதியின் மகாசங்கத்தை நடத்திவந்தால் நலமென்று தெரிவிக்கிறேன் இதுவிஷயம் இந்த மகாநாட்டில் முடிவாகுமென்பதாய் நம்பினவனாக இத்துடன் என் உபந்நியாசத்தை நிறுத்துகிறேன்.

இவற்றை ஆமோதித்துப்பேசியவர் போடிநாய்க்கனூர் முனிசிபல் கவுன்சிலரும் மிராசுதாருமான S. M சோலை செட்டியார், வெகு கெம்பீரத்துடன் யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும்படி

யாய் தெளிவாக நம் ஜாதியின் முன்னேற்றத்திற்குண்டான விஷயங்களை கவனிக்க நிர்வாகசபை இருக்கவேண்டியது முக்கியமான காரியமென்று சொன்னார்.

மேற்கண்டவிதம் நிர்வாகசபையும், உபசங்கங்களும், நமக்கென்று ஓர் தனிப் பத்திரிகையும் வேண்டு மென்பதாய் ஹரூர், பாராமால் 18-கெடி தேசாதிபதி செட்டுமை தாலூகா போர்டு மெம்பர் C. ராமசாமி செட்டியாரும் கடிதமூலமாய் தெரிவித்திருந்தார்.

## ஓர்க்கிங்பாடி

ஒவ்வோர் ஊர்களுக்கும் ஷை ஓர்க்கிங் கமிட்டியார் போய் அந்தந்த ஊர்களிலுண்டானகுறைகளை கவனித்து சீர்திருத்தம் செய்யக்கூடிய (அதாவது பிரசாரவேலை) ஓர்கமிட்டி இருக்கவேண்டியது அவசியமென்றும் அன்னவர்கள் கவனிக்கவேண்டிய வேலைகள் இன்னின்னதென்றும் C. K. பழனிச்சாமி செட்டியார் உபந்நியாசம் செய்தார்.

இவற்றை ஆமோதித்து உபசாரணைக் கமிட்டி சேர்மென் M. கந்தசாமி செட்டியார் பேசினார்.

## உபசங்கங்கள்

நமது மகாசங்கத்தை அனுசரித்த முக்கியமான உபசங்கங்கள் இருக்கவேண்டு மென்றும். இவ்வித சங்கத் தலைவர் நமது மகா சங்கத்தின் அங்கத்தினர்களாய் இருக்கவேண்டு மென்றும் சரபம் முத்துச்சாமிக்க கவிராயர் உபந்நியாசம் செய்தார்.

## R. P. அழகிரி செட்டியார்

நமது 3-வது மகாநாடு விஷயமா யுண்டான செலவுகளுக்கு இத்தென்னாட்டிலுள்ள 167- கிராமங்களுக்குத் தலைக்கட்டுவரி 8-அணாவீதம் ஏற்படுத்தி பேப்ளிக்கட்டுரசீது அனுப்பியதின்பேரில் சரியாய் தொகை வராததால் வசூல் செய்வதற்காய் போனவர்களிடம் சிலஊரார் கொடுத்தும் கான்பரென்சுக்கு வரும்போது கொண்டுவருவதாய் சொல்லியும் அனுப்பினார்கள் அவ்விதம் சொல்லியனுப்பியிருக்கும் ஊர்வாசிகள் தாங்கள் கொண்டுவந்த தொகைகளை கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## சபாநாயகர் T. தனுக்கோடி செட்டியாரவர்கள்

# முடிவுரை

—○—

### கடவுள் வணக்கம்

ஓம் என்னும் அகர உகர மகர இம்மூன்றும் ஓங்காரம் இஃது கடவுளின் உத்தமநாமமாகும் நாம்தினம் காலை மாலை ஸந்தியாவந்தன நித்திய கடமைகளைச் செய்யவேண்டியதும் தவிர நமது குல தேவதையாகிய ஸ்ரீ காமாச்சியம்மனை சதாகாலம் ஒவ்வொருவரும் மறவாமல் இருக்கவேண்டியது. இந்த மூன்றாவது மகாநாட்டிற்கு என்னை சபாநாயகராக தேர்ந்தெடுத்ததற்கு என்பேரில்உண்டான அன்பே என்பதைப் பற்றி என் முகவுரையில் கூறியுள்ளேன், ஆயினும் இந்த மூன்றுநாளாய் நீங்கள்பலர் உபந்நியாசங்கள் செய்ததை பொருமையுடனிருந்து கேட்டு ஆனந்தப்பட்டிருப்பீர்கள். ஆதலால் அவைகளையே மீண்டும் நான் சொல்லவேண்டியது மிகப் படுமாதலால் என்னுடைய கடமையாகிய முடிவுரையையும் சுருக்கிச்சொல்ல ஆவலுள்ளவனாய் இருக்கிறேன் அவற்றையும் அமைதியுடன் கேட்பீர்களென்று வந்தனத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### மகாநாட்டின் அவசியம்.

பூர்வத்திலிருந்து நம்மவர்கள் ஒற்றுமையுடனும் ஆவலுடனும் புருஷார்த்தத்தை முன்னிட்டு எக்காரியத்தையும் எல்லோரும் கலந்து பேசி பொதுநன்மைக்குப் பாடுபடும் ஸ்வாபமுள்ளவர்களென நமது குலசரித்திரத்தால் தெரியவருகிறது ஏதோ காலகெதியால் பல்லூர்களுக்கும் பற்பல விதமாய் சிதறிப்போய் குடியேறினார்கள் அக்காலமுதல் பொதுநன்மையையும் விடாமுயற்சியையும் ஈஸ்வர பிரார்த்தனையையும் கல்வி, நாகரீகம், நன்னடக்கை, பரோபகாரம், இவைகளை கைநழுவ விட்டதினால் அநாகரீகம் குடிகொண்டன. இனிமேல் இக்கொடுமையிலிருந்து நீங்கி சற்குணமுள்ளவர்களாய் நாம்ஒருங்கே வாழுங்காலம் சம்பவித்தது அதாவது நமது வம்ஸஸ்த்

தர்கள் ஒருங்குகூடி நடாத்திவந்த மூன்று கான்பரென்சுகளின் பலனே முதலில் நாம் அடைந்தது, பிரிந்துபோய் வாழ்ந்து வந்தவர்கள் ஒன்றுசேர்ந்தோம். இரண்டாவது கல்வியை நமது வம்ஸத்திற்கு விர்த்திசெய்ய ஏற்பாடுசெய்தோம். மூன்றாவது நமது ஒற்றுமை என்றுங்குறையாதிருக்க ஓர் நிர்வாக சபையை நியமித்தோம் நலம் இத்யாதிநற்பயனடைவதற்கு ஏதுவாகியமகாநாடு ஒவ்வொரு வருஷமும் வெவ்வேறு ஜில்லாக்களில் கூடவேண்டியது அவசியம்.

## நமது பூர்வீகச் சிறப்பு

தேசாதிபதிகளே! எந்தவகுப்பினரும் அவரவர்களின் பூர்வோத்திரம் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாய் இருக்கிறார்கள் அவைபோல் நம்மவரில் நமது பூர்வீகம் தெரிந்தவர்கள் சிலரும் தெரியாதவர்கள் பலருமாக அநேக கிராமங்களிலும் இருப்பதால் இனிமேலாகிலும் வம்ஸ சரித்திரம் தெரிந்துகொள்ள வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். அதனால் நமது குலத்திற்கு ஆதிபுருஷன் பிரமயாகத்தில் தோன்றிய பிரிதிவீச்சுரனென்றும், புத்திர காமேஷ்டியாகத்தால் 24—மக்கள்பிறந்ததற்கு கலைக்கோட்டு மகாரிஷி தீக்ஷைபெற்று யாகத்தை நடாத்தியதால் கலைக்கோட்டு ரிஷிவம்சமென்னும், சாதுகாமாச்சிதேவி நமது குல மும்முடியனுக்கு பட்டம்சூடியதால், அம்பிகைக்குப் பட்டத்தரசி யென்றும் நாமம் அமைந்ததல்லாமல் நமது குலதெய்வமென்றும் தெரிகிறது இன்னம் நம்மவர்கள் உலகெல்லாம் புகழ செங்கோல் நடத்தும் ப்ரக்யாதரும், இல்லை யென்பார்க்கு ஈய்ந்திடும் கொடையாளரும் பதினெட்டு வருணத்தவர்க்கும், அபிமான கர்த்தரென்றும் அஷ்டதிக்குபுகழ வியாபாரிகளென ரெக்ஷணைபட்டம் தரித்தவரும் பெருவியாபாரம் செய்து செட்டுமை பட்டம்பெற்றவரும், சரண மென்போர்களுக்கு அபயஸ்தம் கொடுத்து காக்க பாண்டியனுக்கு சிரங்கள் தந்து புகழ்பெற்றவரும், இருடிகளால் கோத்திரப்பேர்பெற்றவரும் திருமூர்த்திகளால் அளித்தவிருதுகள் அணிந்த சூரரும், மதுவைய முதமாகவும், மான்தலையை மாத்தலையாகவும் சோழனுக்கு பெண் கொடாது பொற்பாவை கொடுத்தவரும் சேரனை வென்று மகள் சிரோன்மணிக்குப்பட்டங்கட்டியவரும் குருவிந்தனை ஜெயித்து கூர்ஜ்ஜரத்தில் ஜெயக்கொடிநாட்டியவரும்

மும்முடி பெற்று அரசாண்ட ராஜாதிராஜ இருபத்து நான்குமனை தேசாதிபதி யாகச்சத்ரியர்களென்னும், உடுமலை திருமூர்த்திக்கவி ராஜ ஞான பண்டிதரால் இயற்றிய தேசாதிபதி நாடகத்திலும் கோவைகுலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன்செட்டியார் இயற்றியயாகசத்திரிய குலப்பிரகாசிகையாலும் மதராஸ் கன்னல்மொழி பௌராணிகர் அங்குசாமிசெட்டியார்இயற்றிய மகாமகச்சத்திரிய புராணத்தாலும், கோயமுத்தூர் C. K. பழனிச்சாமி செட்டியார் இயற்றிய 24- மனையார் சரித்திரச் சுருக்கமென்னும் நூலாலும் தெரிகிறது. ஆதலால் அவைகளை முக்கியமாய் வாசிக்கவேண்டியது ஒவ்வொருடைய அத்யாவசியம்.

## நமது தற்கால நிலைமை.

நமது குலச் சரித்திரங்களை வாசித்தவரையிலும் முதியோர்களால் சொல்லக் கேட்டவரையிலும் நம்முன்னோர் நிலைமையைப் பற்றி யோசிக்க எனக்கு பிரபஞ்சத்தில் நம்மவர்கள் ஆதிகாலத்திலும் மத்திய காலத்திலும் எவ்வளவு சிறப்புடன் நீதி தவராது வாழ்ந்தராஜாக்களாக இருந்தார்களெனதெரிகின்றது. ஆனால் நாம் கால கதியால் இப்பொழு திருக்கும் ஸ்திதிகளையும், நம்மில் குடிகொண்டிருக்கும் அவிவிவேக அனுச்சாரங்களையும் ஏழ்மையையும் குலஹீனகருமங்களையும், குலாபிமானம் அற்றுப்போயிருப்பதையும் இதரவகுப்பினர் காலத்தை அனுசரித்து தத்தம் ஸ்திதிகளை மேம்பாடாயடைந்துகொண்டிருக்க நம்மவர் பெரும்பாலோர் கும்பகர்ணத் தூக்கத்தில் அமிழ்ந்து கொண்டிருப்பதையும்காண எனக்குசொல்லொணா வருத்தமடைகிறது. ஆனால் இவ்வருத்தத்துடன் வாழ்ந்து வந்து பெருமூச்சு விடுவதால் யாது பயன்? ஆதலால் இதுவரையில் நடந்தேரிய இரண்டு மகாநாடுகளிலும் தீர்மானித்த தீர்மானங்களை அச்சிட்ட ரூபமாக வைக்காது காரிய ரூபமாக்கி வாக்குசூரர்களல்லாது காரியவீரர்களாகுவதுநமதுகடமையாகும்.

## நாம் என்ன செய்யவேண்டும்

செய்யொணாது செய்யக் கூடாது, செய்ய வேண்டியதை செய்தே தீரவேண்டும், என்னும் இவ்வாக்கியங்களை முன்னிட்டு விடாமுயற்சியை கைபற்றி, ஒற்றுமை சாந்தம் பரோபகாரம் ஊக்கம் தற்புகழ் கோராமை நிஷ்காமகருமம் உடல் பொருள் ஆவிதர்ப்

பணம் பொருமையின்மை முதலானவைகளைநம்வசமாக்கி மேலான குணங்களாகிய இப்பதவியை நாம் அடைய வேண்டியிருக்கிறது. அவற்றிற்கு முதலாவது வேண்டியது மூலதனம் இக் காலத்தில் நம்மவர்கள் பலதேசங்களிலும் வாசம் செய்து வரக்கூடியவர்கள் கோவைக் குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன்செட்டியார் கண்டுள்ளகணக்குப்படி 5-லட்சம் ஜனத்தொகையென்று தெரிகிறது. இந்த ஐந்து லட்சத்தில் மாதர்கள் குழந்தைகள் வயது முதிர்ந்தவர்கள் நீங்கலாக மாதம் 30- ரூபாய் சம்பாதிக்கக் கூடியவர்களாகிய புருஷர்கள் ஒரு லட்சம் இருக்கலாமென்று கொள்ளலாம் இந்த ஒருலட்சம் புருஷர்கள் தம்குலஜனுபிவிர்த்தியைக் கருதி சுபநலம் பாராட்டுதல் விட்டு குலதர்மத்தைக் கோரி வருசம் ஒன்றுக்கு தலைகட்டு வரியாக ஒருரூபாய் செலுத்தினல் நலமாயிருக்கும் இவ்விதமாய் 10 வருஷங்களில் 10-லட்சம் ரூபாய் கொண்ட ஒரு சாஸ்வத மூலதன நிதியை உண்டாக்கக்கூடும். இதனுல் நமது குல பாலர் பாலிகைகளுக்கு ஆரம்ப வித்தியாப்பியாச முதல் காலேஜ் பட்டப் பரீக்ஷை வித்தியாப்பியாசம் வரையில் செய்விப்பதுடன், நமது குல ஏழைச் சிறுவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுத்து ஓர் ஹாஸ்டலும் ஏற்படுத்தலாம். இதனுல் நம்மவர்களில் அநேகர் மேல் பரீக்ஷைகளில் தேரி பி. ஏ. எம். ஏ. பட்டத்துடன் விளங்குவார். அதனுல் உத்தியோக தோரணையிலோ அல்லது வியாபாரத்திலோ மேம்பட்டாய் வாழ்ந்துவர ஏதுவாகும். அதனுல் நமதுகுலம் முற்காலஸ்திதியில் இருந்துவந்ததைப்போல் விளங்கும் ஆகையால் நமக்கு முக்கியமாய் வேண்டியது கல்வி.

## கைத்தொழில்

நம்மவர்கள் கல்வியை கடைப்பிடித்தால்அக்கல்வியாலுண்டாகும் பயனுல் செல்வவான்களாகி பெருந்தவியாபாரிகளாவதுடன் கைத்தொழில் சாலைகளை ஏற்படுத்தி நமக்கு வேண்டிய வரையில் வஸ்திராதி முதலியவைகளை உற்பத்தி செய்யவேண்டும். இன்னும் இதரநாட்டிலிருந்து எதிர்பார்க்கும் சாமான்களை செய்யும்படி கற்பிக்கவும், செய்துவந்தால் அதனுல் நமதுகுலத்தில் ஏழைகளாயுள்ளவர்களுக்கு அனுகூலமா யிருக்கும் இன்னும் மாதர்கள் அவரவர்கள் வீட்டிலேயே இருந்து கொண்டு உல்லன் பட்டு நூல்முதலிய

வைகளைக் கொண்டு செய்யக்கூடிய வேலைகளும் கை ராட்டினம் வைத்துக்கொண்டு நூல்நூற்றலும் இவ்வித தொழில்களைப்பழக்கி வைப்போமானால் அவர்கள் வெளியில் போய் படிவேலைகள் செய்து அபகீர்த்தி யடையும் தன்மையி லிருந்து நீங்கினவர்களாவார்கள், ஆகையால் பிரபுக்களா யுள்ளவர்கள் முக்கிய ஊர்களில் கைத்தொழில் சாலைகள் ஏற்படுத்தி அவற்றில் நம்மினவர்களில் ஏழைகளா யுள்ளவர்களுக்கே வேலைகொடுத்து நடத்தி வருவது நலமென்று தெரிகிறது.

## பத்திரிகை.

வித்தியாபி விர்த்தியுடன் பல சமாச்சாரங்க ளடங்கிய பத்திரிகைகளை வாசிப்பது நலமென்று எனக்குத் தோன்றுகிறது. பத்திரிகைகளை வாசிப்பதில் பலதேச சமாசாரங்களை அப்போதைக்கப் போது தெரிந்துகொள்ள அனுகூலமாகின்றது. தவிர ஒவ்வொருவரும் பொது விஷயமாயுண்டான காரியங்களை செய்யப்போகு முனனும், செய்தபிறகும், செய்யப் பிரயத்தனப்பட்டாலும் அப்போதைக்கப்போது பத்திரிகையில் பிரசுரமாகும். அதனால் யாவர்களும்வாசித்து அபிவிர்த்தியையடைய ஓர் அனுகூலமானதாய் இருக்கும். ஆதலால் நம் வகுப்பினர்க்குச் சம்மந்தப்பட்ட ஓர் தமிழ் பத்திரிகையும் ஓர் தெலுங்கு பத்திரிகையும் இருக்கவேண்டியது அவசியம். நம் அதிர்ஷ்டவசத்தால் நமது குலாபிவிர்த்தியைக் கருதியே நம வம்ஸம் பிரகாசிக்கச் செய்யவேண்டி உடல், பொருள், ஆவி மூன்றைத் தத்தம்செய்து பாடுபட்டுவரும் கோவைக் குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியார் இதுவிஷயத்தில் அனுபவமுடையவராதலால் அன்னவர் ஓர் குலப்பத்திரிகை பிரசுரஞ்செய்தால் நலமென்று தெரிகிறது. இதை இக்கான்பரென்ஸ் முடிந்ததும் ஏற்படுத்துவாரானால் அவற்றை நம்மவர்கள் யாவர்களும் வாங்கி வாசிக்க வேண்டியது அதில் நமது குலச்சரித்திரம், ஒவ்வோர் ஊர்களில் நடக்கும் நம்மவர் விஷயங்கள், பலதேச சங்கதிகள் முதலியவைகள் அடங்கிவரும். ஆதலால், "குலாபிமானி" என்ற பெயருடன் வெளிவரும் பத்திரிகையை, நமது குல பத்திரிகையாக பாவித்து ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து வாங்கி வாசிக்கவேண்டியது நலமென்று எனக்குத் தோன்றுகிறது.

தவிர, மதுரையில் மும்முடி கோத்திரம் T. முத்துச்சாமி செட்டியாரால் நடாத்திவரும் "கலியுக வர்த்தமானி" யென்ற பத்திரிகையையும் ஒவ்வொருவரும் தருவித்து வாங்கிவாசித்துவந்தால் அதில் பல பொது விஷயங்களும், ஜாதி விஷயங்களும் அடங்கியிருக்கும் ஆதலால் நமக்கு நம்ஜாதிக்கென்ற தனிப் பத்திரிகை இருக்கவேண்டியது நலம்.

## சட்ட சபை.

நம் முன்னோர்கள் ராஜாங்கம் நடாத்தி வந்தவர்களாயிருந்த காலம்போனாலும், அதன் ஆம்ஸத்தையாவது காப்பாற்றவேண்டி நமது மாகாண கவர்ன்மெண்ட் சட்ட சபையில் ஓர் மெம்பர்ஸ்தானம் அடையாதிருப்பது பெருங் குறைவேயாகும். நம்மைவிட ஜனத்தொகையில் குறைந்தவர்களெல்லாம் ஷை சபையில ஸ்தானம் பெற்றிருக்க நாம் வீணேயிருப்பது பெருங்குறைவேயாகும் ஆதலால் நம்மவரில் யாராவது ஷை மெம்பராய் ஸ்தானம்பெற முயற்சி செய்வது நலமென்றுதெரிகிறது. அதனால் நமது குறைகளை நாமே எடுத்துக்காட்டி நிவர்த்தி செய்துகொள்ள சவுகரியமாயிருக்கும்.

## நிர்வாக சபை.

சகோதரர்களே நமது மகாநாடுகூடி இதுவரையிலும் சிற்சில விஷயங்களாகிய ஜாதி முன்னேற்றத்திற் குண்டான நடவடிக்கைகள் உண்டாயிருக்கின்றனவே யொழிய முக்கிய சாதனங்கள் முற்றுப்பெறவேண்டுமானால் ஓர் நிர்வாகசபை ஏற்பட்டு அவற்றை கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்து மேல் நடக்கவேண்டிய காரியங்களை நடத்திவர சவுகரியமாயிருக்கும். ஆதலால் நமது மகாசங்கத்தை நிர்வகிக்கக்கூடிய ஓர் சபை இருக்கவேண்டியது அவசியம். அதனால் தர்ம பாடசாலைகள், ஹாஸ்டல், தொழிற்சாலைகள் முதலியவைகளை ஏற்படுத்தவும், அதற் குண்டான கிரமமான செலவுகளுக்காக பண்டு வசூலிக்கவும் சவுகரியமாய் இருக்கும். இதற்காகவே நிர்வாக சபை இருக்கவேண்டியது அவசியம்.

## உபசங்கங்கள்.

ஒவ்வொரு முக்கியகிராமங்களில் ஒவ்வோர் கிளைச்சங்கங்கள் இயற்றி அதன் மூலமாக வாசகசாலைகளும், தொழிற்சாலைகளும் ஏற்படுத்தி நமதுகுல சிறுவர் சிறுமிகளை வாசிக்கவும், கைத்தொ

றின் செய்யவும் அதற்குவேண்டிய பொருளுதவி செய்யவும், அந்தந்த ஊர்களிலுள்ள முக்கியஸ்தர்களின் கடமை என்பதைத்தெரிவிக்கிறேன்.

சபையோர்களே!

நீங்கள் பொருமையுடனிருந்து எனது முடிவுரையைக்கேட்டு வந்தீர்களாதலால் இதிலடங்கிய முக்கியமாயுள்ள விஷயங்களை நம் குலாபிவிர்த்திக்குக்காரணமாக குலதர்மத்தைமுன்னிட்டு நடத்திக்காட்டுவீர்களென்று நம்பினவனாய் எனது பிரசங்கத்தை இத்துடன் முடிக்கிறேன் இனி நடக்கும் தீர்மானங்களையும் பொருமையுடனிருந்து கேட்பீர்களென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

## தீர்மானங்கள்.

### 1-வது தீர்மானம். நிர்வாக சபை:—

———:o:———

நமது மகா சங்கமானது சீராய் நடைபெற்று வரவும், நீடித்தகாலம் நிலைபெறவும், ஓர் நிர்வாக சபை யிருக்கவேண்டியது முக்கியமானதாக இருக்கிறது. இச் சபைக்கு எல்லா ஜில்லாக்களிலுமுள்ள முக்கிய கனவான்களில் 120-வரை ஜெனரல் பாடி மெம்பர்களாக தேர்ந்தெடுத்து, இவற்றில் 48-மெம்பர்களை மானேஜிங் கமிட்டியாக நியமித்து, இவர்களில் 24 மெம்பர்களை ஆனரெரி உத்தியோகஸ்தர்களாக ஏற்படுத்தி கவர்ன்மெண்டாரால் ரிஜிஸ்த்தர் செய்து கொண்டால், நமது வம்ஷம் அபிவிர்த்தியின் பொருட்டு தர்மபாடசாலைகள், தொழிற்சாலைகள் ஹாஸ்டல் முதலியவைகள் ஏற்படுத்தவேண்டி மூலதனம் சேகரிக்கவும், அத்தொகையை மேற்கண்ட காரியங்களுக்கு செலவுசெய்யவும் சவுகரியமாய் இருக்குமென, கோவைக் குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியாரால் பிரேரேபிக்க இவற்றை போடிநாயககனூர மிராசுதாரும் முனிசிபல் கவுன்சிலருமான S. M சோலை செட்டியார் ஆமோதித்துப் பேசினர் இது விஷயமாக ஏகமனதாய் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டு ஷை சபைக்கு அடியில் கண்ட மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

24-மணியார்,

## தெலுங்க செட்டியார்களென்னும், யாககக்ஷத்திரியர்

# சென்னை ராஜதானி மகாஜன சங்கம்

## நிர்வாக சபை அங்கத்தினர்கள்.

### பிரஸிடெண்ட்.

ம-ா-ா-ஸ்ரீ C. K. பழனிசாமி செட்டியார்,
முனிசிபல் கவுன்சிலர் அண்டு பிரசிடெண்ட்
பஞ்சாயத்துக் கோர்ட்; கோயமுத்தூர்.

### வைவ்ஸ் பிரஸிடெண்டுகள்.

,, T. A. இராமச்சந்திரஞ் செட்டியார், L. M. P
மெடிக்கல் பிராக்ட்டீஷனர்; தஞ்சாவூர்.

,, C. இராமசாமி செட்டியார்
பாராமால் 18-கெடி தேசாதிபதி செட்டிமை;
தாலூகா போர்டு மெம்பர்; ஹரூர்.

,, S. முத்துக்கருப்பன் செட்டியார்
ஆனரெரி பெஞ்ச் மாஜிஸ்திரேட் அண்டு பிரஸி
டெண்ட் மகாஜன பாடசாலை, ஈரோடு.

,, M. சந்தசாமி செட்டியார்
டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர் அண்டு யூனியன்
சேர்மேன்; சங்கரன்கோவில்.

,, V. கோவிந்தசாமி செட்டியார், Y. M. S. A.-
பிரஸிடெண்டு; மதருஸ்.

,, K. துரைசாமி செட்டியார்
ஆனரெரி பெஞ்ச் மாஜிஸ்திரேட், ஈரோடு.

,, R. சதாசிவம் செட்டியார்
தாசில்தார், கோபிசெட்டிபாளையம்.

,, V. கிருஷ்ணசாமி செட்டியார் B. A
சப்ரிஜிஸ்தரார், இராமநாதபுரம்.

மா-ா-ா-ஸ்ரீ S. K. அங்குசாமி செட்டியார்
கன்னல்மொழி பௌராணிகர், மதுரை.

" K. M. பெத்தனு செட்டியார்
சாவுகார், ராயபுரம்

" கொ. பெ. தேவராண்டி செட்டியார்
ஜவுளிக்கடை, விருதுபட்டி.

" V. ராமசாமி செட்டியார் Y. M S. A.
செக்ரடெரி, மதுரை.

" C. ஜெனகய்ய செட்டியார் ஷை ஷை

" V. M. இராமசாமி செட்டியார்
மிராசுதார் அண்டு தாலூகா போர்டு மெம்பர், பன்னக்காடு.

" K, A. P. பழனிசாமி செட்டியார்
மிராசுதார் அண்டு காமாக்ஷி விலாச பாங்கு
பிரஸிடெண்ட், சுண்டக்காயமுத்தூர்.

" P. C. R நாராயணசாமி செட்டியார்
ஜின்னிங் பாக்டரி புரோப்ரைட்டர், திருப்பூர்.

" K சாமிநாதஞ் செட்டியார்
காட்டன் மெர்ச்சண்ட், திருப்பூர்.

" S. M. சோலை செட்டியார்
முனிசிபல் கவுன்சிலர், போடிநாயக்கனூர்.

" P. அருணாசலம் செட்டியார்
மிராசுதார், காமேகவுண்டம்பட்டி.

## ஜெனரல் செக்ரட்டெரிகள்.

" T. தனுக்கோடி செட்டியார்
கவர்ன்மெண்ட் ஸ்கூல்மாஸ்டர், குல்பர்க்கா,

" T. முத்துச்சாமி செட்டியார்
பத்திராதிபர் கலியுகவர்த்தமாணி, மதுரை.

## ட்ரெஷரர்

" N. C. லட்சுமண செட்டியார்
மிராசுதார் அண்டு யூனியன் சேர்மன், நடுப்பாளையம்

## ஆர்க்கனைவர்.

ம-ாா-ஸ்ரீ V. B. வெங்கிட்டராமன் செட்டியார்

குலாபிமானி, கோயமுத்தூர்.

## மானேஜிங் கமிட்டி மெம்பர்கள்.

---

,, பெ. கோ. ராமன் செட்டியார்

ஏழூர் செட்டிமை; கணுவாய் பாளையம்.

,, K. M. சோமுநாதஞ் செட்டியார்

பெரியதனம், வேட்டக்காரம்புதூர்.

,, N. கிருஷ்ணஞ் செட்டியார்

மிராசுதார், வல்லங்கி.

,, தெ. சு. கருப்பஞ் செட்டியார்

சாக்குமண்டி, விருதுபட்டி.

,, R. P. அழகிரி செட்டியார்

ஜவுளிக்கடை, விருதுபட்டி.

,, K. கந்தன் செட்டியார்

தி-கு-ம் பொதுமடாலய தர்மகாரியஸ்தர், விருதுபட்டி.

,, ஆ. கு. வையாபுரி செட்டியார்

முனிசிபல் கவுன்சிலர், பவானி.

,, K. S. திருப்பசி செட்டியார்

ஜெனரல் மெர்ச்செண்ட், கரூர்.

,, V. சொக்கலிங்கஞ் செட்டியார்

தாலுகா போர்டு மெம்பர். முசிறி.

,, பொ. வ. திம்மராய செட்டியார்

மிராசுதார், கருங்காலிபட்டி.

,, க. தே. பழனிசாமி செட்டியார்

மிராசுதார், சுண்டக்காயமுத்தூர்.

,, வெ. திருமலை செட்டியார்

அம்பலம் அண்டு மிராசுதார், கோயிலாங்குலம்.

,, B. தாமோதரன் செட்டியார்

ஜவுளி வியாபாரம், சூளை மதருஸ்.

,, V. M. சுருளிச்சாமி செட்டியார்

டிஸ்டிரிக்ட் போர்டு...

ம-௱-௱-ஸ்ரீ இ. பி. அ. சின்னராமஞ் செட்டியார், இலுப்பையூர்.
காட்டன் மெர்ச்சண்ட்.

,, நா. பெத்தி செட்டியார்
பகவதியம்மன் கோயில் மானேஜர், வடுகபட்டி.

,, ரா. சோலை செட்டியார்
சவுளிக்கடை, போடிநாயக்கனூர்.

,, கூ. வ. அ. ராமி செட்டியார்
ஜெனரல் மெர்ச்செண்ட், ஹரூர்.

,, சரபம் முத்துசாமிக் கவிராயர், உடுமலைப்பேட்டை.

,, ம. கு. உலகநாதன் செட்டியார்
அயரன் கமர்ச்செண்ட், உடையூர்.

,, V. சங்கரலிங்கஞ் செட்டியார்
தமிழ் வித்துவான், மதுரை.

,, வ. கு. பழனியப்ப செட்டியார்
முதலாளி, செம்புளிஞ்சாம்பாளையம்.

,, R. நடராஜ செட்டியா
ஜவுளிக்கடை, வேட்டைக்காரம்புதூர்.

,, கி. சுப்பய்ய செட்டியார்
செட்டிமை, வெகமம்.

## ஜெனரல்பாடி மெம்பர்கள்.

,, கு. சுப்பிசெட்டியார் செட்டிமை சுண்டக்காயமுத்தூர்
,, அக்கலுவிரி செட்டியார், கூடியூர்.
,, ல. வெங்கிட்டஞ் செட்டியார், கூடியூர்.
,, V. P. வெங்கிட்டராமன் செட்டியார், நடுப்பாளையம்.
,, கு. ரங்கசாமி செட்டியார், தெலுங்கபாளையம்.
,, வா. சு. முத்துச்சாமி செட்டியார், தத்தமங்கலம்.
,, தி. லட்சுமண செட்டியார் பெரியதனம், கோட்டூர்.
,, திருமூர்த்தி செட்டியார் பெரியதனம், ஏற்பட்டி.
,, தி. ரங்கசாமிக் கவிராயர், பழனியூர் கோட்டூர்.
,, திருமூர்த்தி செட்டியார் நாட்டாண்மை, பூழவாடி.
,, ரா. கிருஷ்ண செட்டியார், உடுமலைப்பேட்டை.
,, N. பொன்னுசாமி செட்டியார் கவிராயர், வாழவாடி.
,, கோ. வெங்கடாசலஞ் செட்... சி...

ம-ள-ஸ்ரீ D. R. செட்டியப்ப செட்டியார், கொமாரபாளையம்
,, மா. ஆறுமுகஞ் செட்டியார், பாலக்கோடு.
,, சு. வெ. சென்னிசெட்டியார் செட்டுமை, ஹரூர்.
,, V. சஞ்சீவி செட்டியார், வெங்கிடதாம்பட்டி.
,, கி. மு. காளி செட்டியார், மாட்லாம்பட்டி.
,, சி. திம்மராயஞ் செட்டியார், கண்ணன்டஹல்லி.
,, க. வெங்கிட்டராமன் செட்டியார், மாரண்டஹல்லி.
,, தி. தா. குப்பி செட்டியார், வெங்கிட்டம்பட்டி.
,, க. நாராணசாமி செட்டியார், பழைய ஆய்க்குடி.
,, தி. மு. வெங்கிட்டராமஞ் செட்டியார், கரூர்.
,, சு. ராமசாமி செட்டியார், விஜயபுரம்.
,, V. ராஜகோபால் செட்டியார், மைசூர்.
,, T. B மாணிக்கஞ் செட்டியார், பல்லாரி.
,, அ. வா. அங்கையஞ் செட்டியார், நிலக்கோட்டை.
,, வை. வையாபுரி செட்டியார், ஸ்ரீவில்லிபுத்தூர்.
,, ச. வீ. பாலகுருநாதஞ் செட்டியார், கல்மண்டபம்.
,, ரெ. சாமிநாதஞ் செட்டியார் சாமிபிள்ளைதெரு, சூளை.
,, C. S. அழகிரிசாமி செட்டியார், கோயமுத்தூர்.
,, சு. ஆனந்த திருமலைசாமி செட்டியார். ஷெயூர்.
,, வெ. பொன்னஞ் செட்டியார், வடக்குவீதி ஷெயூர்.
,, பெத்தி செட்டியார், ஆலாந்துரை.
,, ரா. அண்ணாமலை செட்டியார், திண்டுக்கல்.
,, மு. மகாலிங்கஞ் செட்டியார், மகாராஜபுரம்.
,, K. செல்வஞ் செட்டியார், கன்னங்குரிச்சி.
,, அருநாடு பட்டக்கார சுவாமிகள் தொம்பிலிபாளையம்.
,, தி. பெ. ருமலிங்கஞ் செட்டியார், பன்னக்காடு.
,, தெ. ச. க. சுப்பஞ் செட்டியார், விருதுபட்டி.
,, ஜெ. அண்ணாமலை செட்டியார், தேவதானப்பட்டி.
,, க. வெங்கிடசாமி செட்டியார், பூலத்தூர்.
,, மூ. ஆ. போதகுருநாதஞ் செட்டியார், ஐயம்பாளையம்.
,, அ. அங்கையஞ் செட்டியார், அருப்புக்கோட்டை.
,, வீ. ர. சு. எஸ்டேட், மொ. அ. செட்டியார். ஷெயூர்.
,, கோ. கோனைய செட்டியார், மறவர்பெருங்குடி.
,, பெ. கு. பெருமாள் செட்டியார், வெங்கிடேசபுரம்.

| | | |
|---|---|---|
| ம-ா-ா-ஸ்ரீ | தா. ரா. சுப்புராமு செட்டியார், | வடுகபட்டி. |
| ,, | கோபி செட்டியார், | போடிநாய்க்கனூர். |
| ,, | ச. இரங்கப்ப செட்டியார், | பருகூர் |
| ,, | வெ. அ. பெருமாள் செட்டியார், | ராஜபாளையம் |
| ,, | A. A. அளகிரி செட்டியார், | தூத்துக்குடி |
| ,, | K. நாராயணசாமி செட்டியார், | நாசிங்கநல்லூர். |
| ,, | சோ. பெ- கருப்பஞ்செட்டியார், | புலிக்குத்தி. |
| ,, | வீ. கருப்பன் செட்டியார், | அணைப்பட்டி. |
| ,, | R. நாராயணசாமி செட்டியார். | கோயிலாபுரம் |
| ,, | ரா. பழனிசாமி செட்டியார் மண்டி, | ஈரோடு |
| ,, | மாரிமுத்து செட்டியார், இரும்புக்கடை | ஷை யூர். |
| ,, | ரா. கி ருஷ்ண செட்டியார், | உடுமலைப்பேட்டை. |
| ,, | பெ. பெத்தஞ் செட்டியார், | ஐயங்கோட்டை. |
| ,, | S. நாராயணசாமி செட்டியார், | கும்பகோணம். |
| ,, | C. B. வெங்கிட்டராமன் செட்டியார், | கோயமுத்தூர். |
| ,, | கோ. க. தாண்டவ செட்டியார், | சிங்காரத்தோட்டம். |
| ,, | M. வெங்கிட்டராமய்ய செட்டியார், | சூளை. |
| ,, | வண்டேர் திருமலைசெட்டியார், | வண்ணாரப்பேட்டை. |
| ,, | போ. பு. கொண்டல் செட்டியார் | ஷையூர். |
| ,, | கொ ரா. திருமலை செட்டியார் | ஷையூர். |
| ,, | V. T. வெங்கிடசாமி செட்டியார், | வேட்டக்காரம்புதூர் |
| ,, | T. P. துரைசாமி செட்டியார், | திருக்கோவலூர். |
| ,, | V. கந்தப்ப செட்டியார். | திருப்பூர். |
| ,, | வெங்கிடாசலம் செட்டியார், | செஞ்சேரி. |
| ,, | ஆலாந்தூர் அப்பாய் செட்டியார் | மதருஸ். |

குறிப்பு:— ஆக மெம்பர்கள் 120- கொண்டது நிர்வாகசபை எனப்படும். இந்த சபையின் ரூல்ஸ்களும் இதற்குண்டான மற்ற விஷயங்களும், ஜெனரல் பாடி மீட்டிங்கு கூடி ஏற்படுத்தப்படும்.

## 2-வது தீர்மானம், தலைக்கட்டுவரி.

கோயமுத்தூரிலுங் காஞ்சீபுரத்திலுங்கூடிய முதலிரண்டு மகாநாடுகளில் தீர்மானங்களான பிரகாரம் தர்மபாடசாலைகள் தொழிற்சாலைகள், ஹாஸ்டல், முதலானதுகள் ஏற்படுத்துவதற்காக, தனம் வேண்டியிருப்பதால சென்னைமாகாணத்திலுண்டான நமது வம்சத்தார்களிடம் வருஷம் ஒன்றிற்கு தலைக்கட்டுக்கு ஒரு ரூபாய் வீதம் வசூல் செய்யவேண்டுமென்றும் குலதர்மத்தைக் கருதி இப்பெருங் காரியங்களுக்கு பிரபுக்களிடம் நன்கொடையும் வசூல் செய்ய வேண்டுமென்றும், சபாநாயகர் ம-ா-ா-ஸ்ரீ T தனுக்கோடி செட்டியாரவர்கள் பிரேரேபிக்கப்பட்டு கோயமுத்தூர் ம-ா-ா-ஸ்ரீ C. K. பழனிசாமி செட்டியாரவர்களால் ஆமோதிக்க, ஏகமனதுடன்சபையோர்களால் அங்கீகரிக்கப்பட தீர்மானிக்கப் பட்டது.

## 3-வது தீர்மானம், ஒர்க்கிங்கமிட்டி.

(க) நியமனம்.

இரண்டாவது தீர்மானத்தில் கண்ட பிரகாரம் ஓர்கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இதற்கு பிரசிடெண்ட் இந்தமகாநாட்டின் தலைவராகிய T தனுக்கோடி செட்டியாரவர்களையும், செக்ரடேரி நமது கான்பரென்ஸை ஏற்படுத்திய குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியாரவர்களையும் இவர்களுக்கு உதவியாக ஓர் குமஸ்தாவும் இரண்டு பியூன்களும் மாதம் ஆனரெரி அலவன்ஸ பேரில் சென்னை மாகாணத்திலுள்ள கிராமங்கள் தோறும் சுற்றுப்பிரயாணம் செய்து மேலேகண்ட தலைக்கட்டுவரி முதலானவைகளை வசூல் செய்வதற்காகவும், ஆங்காங்கு பாடசாலைகளையும, தொழிற்சாலைகளையும், ஏற்படுத்தவும் சீர்திருத்தங்களை ஜாரிக்குக்கொண்டுவரச் செய்யவும் இன்னும் ஜாதியின் முன்னேற்றத்திற்குண்டான நடவடிக்கைகளை செய்துகொண்டு வருவதற்காகவும், ஏற்படுத்தப்பட்டார்கள், இதனை கோயமுத்தூர் ம-ா-ா-ஸ்ரீ C. K பழனிசாமி செட்டியார்அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு சங்கரன்கோயில்மாாஸ்ரீ M. கந்தசாமி செட்டியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு, ஏகமனதுடன் சபையோர்களால் தீர்மானிக்கப்பட்டது.

(b) நன்கொடை.

மேலேகண்ட தீர்மானத்தின் பிரகாரம் ஒக்கிங்கமிட்டியாரின் சுற்றுப்பிரயாண செலவுக்காக வருஷம் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய் மதிப்பிட்டு நம்மவர்களின் முக்கியஸ்தர்களிடம் நன்கொடையாக வசூலித்து இத்தொகையை முதல் வருஷ செலவுக்காக உபயோகப் படுத்தப்படுமென்றும் இக்கமிட்டியின் செக்ரெட்டெரி வெ. ப. வெங்கட்டராமன செட்டியார் இம்மகாநாட்டின் தீர்மானங்களை நிர்வாகசபைகனவான்கள் 120-பேருக்கு அனுப்பி ஒவ்வொரு மெம்பரும் தாங்களால் கொடுக்கப்படும் தொகை இனனதென்று தெரிவித்தால் அதன்மேல் லீஸ்டில் பதிவுசெய்துகொண்டு ஏப்பல் மாதமுதல் தொகையை வசூல்செய்து மேல்படி தொகையை இந்த கான்பரென்வில் தீர்மானிக்கப்பட்ட நிர்வாகசபையின் பொக்கிஷதார் நடுப்பாளையம் ம-ள-ள-ஸ்ரீ N C. லட்சுமண செட்டியார் மதருஸ் இம்பிரியல் பாங்குக்கு அனுப்ப வேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(c) மகாநாட்டின்முன் நன்கொடை கொடுப்பதாகக் கையொப்பமிட்ட கனவான்கள்,

| | | |
|---|---|---|
| ம-ள-ள-ஸ்ரீ | கோயமுத்தூர் C. K. பழனிச்சாமி செட்டியார் | ரூ 100 |
| ,, | போடிநாய்ககனூர் S. M. சோலை செட்டியார் | ரூ 100 |
| ,, | சங்கரன்கோவில் M. கந்தசாமி செட்டியார் | ரூ 100 |
| ,, | வடுகபட்டி ஜாதியார் பொதுவில் | ரூ 100 |
| ,, | காமேகவுண்டப்பட்டி P. அருணாசலஞ்செட்டியார் | 50 |
| ,, | கோடங்கிபட்டி ஜாதியார் பொதுவில் | ரூ 50 |
| ,, | அம்மாபட்டி ஜாதியார் பொதுவில் | ரூ 50 |
| ,, | சிலையம்பட்டி ஜாதியார் பொதுவில் | ரூ 25 |
| ,, | புலிக்குத்தி ஜாதியார் பொதுவில் | ரூ 25 |
| ,, | குலாபிமானி வெ. ப. வெங்கிடராமன்செட்டியார் | ரூ 25 |
| ,, | மானாமதுரை V. சங்கரலிங்கஞ் செட்டியார் | ரூ 25 |
| ,, | கருநாக்கம் முத்தம்பட்டி ஜாதியார் பொதுவில் | ரூ 20 |
| ,, | மதருஸ் T. முத்துசாமி செட்டியார் | ரூ 20 |
| ,, | உடுமலை சரபம் முத்துசாமி கவிராயர் | ரூ 10 |
| | ஆக | ரூ 700 |

## 4-வது தீர்மானம். சட்டசபை மெம்பர்.

நாம் ஏராளமான ஜனத்தொகையிருந்தும் மதராஸ் சட்டசபையில் ஒருவராவது மெம்பர் ஸ்தானம் பெறவேண்டியது முக்கியமாதலால் நம்மவரில் யாராவது ஸ்தானம் பெற விரும்பினால் நங் குலத்தவர்கள் யாவர்களும் ஓட் கொடுத்து அனுகூலம் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## 5-வது தீர்மானம். உபசங்கங்கள்.

நம்மவர்கள் வசித்துவரும் ஒவ்வொரு முக்கியகிராமங்களிலும் உபசங்கங்களிலும் வாசகசாலைகளும் புத்தகசாலைகளும் ஏற்படுத்துவதால் மிக்க அனுகூலமானதாகையால் இதுவிஷயம் நிர்வாகசபையில் ஸ்தானம் பெற்றிருக்கும் மெம்பர்கள் கவனித்து ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## 6-வது தீர்மானம். (முடிவடையாதவைகள்.)

திருமாங்கல்யதாரண பேதம், விதவாவிவாகம், ஜாதியின் ஒரே பெயர் இவ்விஷயங்களை இந்த மகாநாட்டில் தீர்மானிக்கப்படாமல் ஓர்க்கிங்பாடி சென்னை மாகாணத்திலுள்ள எல்லாஊர்களுக்கும் போய் அந்தந்த ஊர்களிலுள்ள சங்கதிகளையும் ஊராரின் அபிப்பிராயத்தையும் தெரிந்து கமிட்டியாரின் ரிப்போர்ட்டின் படிக்கு அடுத்துக்கூடும் கான்பரென்சுகளில் பூரணமான அத்தாட்சிகளின் ஆதாரவைக் கொண்டு முடிவுசெய்பலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

## 7-வது தீர்மானம்.

நமது மகாநாட்டின் முன் வந்திருக்கும் மனுக்களெல்லாம் திருப்பரங்குன்றம் மடாலயத்தைச் சேர்ந்த 167-கிராமங்களிலுண்டான நமது ஜாதிவழக் காச்சாரத்தைக் கவனிக்கும் படியாயும், அனுச்சாரத்தை அகற்றி ஆச்சாரத்தை கைக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்றும், கல்வி கைத்தொழில் முதலியவைகளை ஏற்படுத்தவேண்டுமென்று இருக்கிறது ஆகையால் இவைகளைக் கவ

னிக்க ஓர் தனிக் கமிட்டி இருக்கவேண்டுமென்று கமேகவுண்டம்பட்டி அருணசலம் செட்டியார் பிரேரேபிக்க; விருதுபட்டி K. கந்தஞ்செட்டியார் ஆமோதித்தார்: சபையோர் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டு அடியிற்கண்ட மெம்பர்களை ஷை கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| விருதுபட்டி, | கோ. கந்தன் செட்டியார் | 1. |
| கோயிலாங்குளம், | அம்பலம் வே. திருமலை செட்டியார் | 2. |
| வெங்கிடேசுரபுரம், | பெ. கு. பெருமாள் செட்டியார் | 3. |
| சங்கரன்கோவில், | M. கந்தசாமி செட்டியார் | 4. |
| ராஜபாளையம், | வெ. அ. பெருமாள் செட்டியார் | 5. |
| மானாமதுரை, | V. சங்கரலிங்கஞ் செட்டியார் | 6. |
| வடுகபட்டி, | நா. பெத்து செட்டியார் | 7. |
| போடிநாயக்கனூர், | S. M. சோலைசெட்டியார் | 8. |
| அணைப்பட்டி, | வீ கருப்பன் செட்டியார் | 9. |
| காமேகவுண்டம்பட்டி, | P அருணசலம் செட்டியார் | 10. |
| புளிக்குத்தி, | சோ. பெ. கருப்பன் செட்டியார் | 11. |

(b) இவற்றில் குறித்திருக்கும் மெம்பர்களல்லாது இன்னும் அப்போதைக்கப்போது வேண்டும்போது ஒவ்வோர் ஊரிலும் முக்கியமாயுண்டான பிரபுக்களும் சேர்ந்து நம் ஜாதி முன்னேற்றமடையும் விஷயங்களைக் கவனித்து வரவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(c) இந்த 3-வது மகாநாட்டின் விஷயமாய் உபசரணைக் கமிட்டியார் ஏற்படுத்திய டேப்ளிக்கட்டு ரசீதுகளின்படிக்கு தலைக்கட்டுக்கு 8-அணா வீதம் வசூல்செய்து அனுப்பும்படி 167-கிராமங்களுக்கு மட்டும் தெரிவித்திருந்தும், அதன்படிக்கு சில ஊர்வாசிகள் சரியாய் வசூல் செய்து அனுப்பாததால் இந்த மகாநாட்டின் வரவு குறைந்தும் செலவு அதிகப்பட்டும் போயிற்று. ஆகையால், இவ்வித வசூல் குறைவாக யிருக்கும் ஊரார், பாக்கியிருக்கும் வரியையும் வசூல் செய்து அனுப்பும்படிக்கு தீர்மானிக்கப்பட்டது.

## ஓர் அனுதாபம்.

நமது வம்சத்தில் செல்வத்திலும், வயதிலும், குலாபிமானத்திலும் முதிர்ந்தவர்களில் ஒருவராகிய மதருஸ் சிங்காரத்தோட்டம் "ம. கோ கந்தஞ் செட்டியார்" மானிடத் தன்மையிலிருந்து, தெய்வத்தன்மையை அடைந்ததினால், நம் குலத்தவர்கள் யாவருக்கும் வியாகூல முண்டென்பதை அவர் குடும்பத்திற்கு தெரிவிக்கவேண்டுமென்று இம்மகாநாடு கருதுகின்றது. அன்னவர் மதுரை ஜில்லாவில், மட்டப்பாரை யென்னும் ஊரில் ஜெனித்து, மதருஸ் குடியேறிய பின், புத்திர பாக்கியமும், தனபாக்கியமும் அம்பிகையருளால்பெற்று, தயவு. தாச்சண்யம், ஈவு; இரக்கம், நல்லொழுக்க முதலியவைகளில் மேம்பட்டு திருவொற்றியூரில் ஓர் தர்ம சத்திரமும், திருப்பரக்குன்றம் நமது மடத்தில் ஓர் கிணறும், பாலையம்பட்டியில் ஓர் ஆலயமும், இன்னும் சில முக்கிய தர்மங்களையும் செய்திருக்கிறார் தவிர நமது குல ஏழைச் சிறுவர்களுக்கு ஓர்தர்மபாடசாலை ஏற்படுத்தவேண்டி இடம்வாங்கி விட்டவர் கட்டிடங்கட்டி பாடசாலை ஏற்படுத்தி பூரணமாய் முற்றும்பார்க்காமல் இறந்துபோனகுறையை அவரது உத்தமகுணமக்களாகிய நால்வர்களும் ஒருமனதாய் தந்தைஎண்ணத்தை பூர்த்திசெய்துவைப்பார்களென்று இந்தமகாநாடு எதிர்பார்க்கிறது. முதலிரண்டு கான்பரென்சுகளில் அவரது பூதஉடம்பு இருந்ததுபோல இந்தகான்பரென்ஸிலும் அவரது புகழுடம்பு இருக்குமென்பது திண்ணம்.

---

## சபாநாயகர் அளித்த வந்தனங்கள்.

நமது வழிபடு கடவுளுக்கும், வாலண்டியர்களுக்கும், மகாஜன சமூகத்திற்கும், நிர்வாக சபையோருக்கும், விருதுபட்டி நம்மவர்கள் இக்கான்பரென்ஸ் விஷயமாய் வசூல்செய்துவந்தும் பண்டகசாலை, போஜனசாலைகளில் உபசரணை செய்தவர்களுக்கும் வந்தனமளிக்கப்பட்டது.

## நிர்வாக சபையோர் அளித்த வந்தனங்கள்.

சபாநாயகரவர்களுக்கும், பாரத மாதாவுக்கும், சுதேசாபிமானிகளுக்கும், கான்பரென்ஸ் ஹால், போஜனசாலை முதலியவைகளுக்கு இடம் தந்தவர்களுக்கும், குலாபிமானி வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியாருக்கும், சச்சிதானந்தம் பிரஸ், புரோப்ரைட்டர் அவர்களுக்கும், கவர்ன்மெண்டுக்கும். சுபம்.

## 3-வது கான்பரேன்ஸ் விஷயமாய் 1922-வருஷம் ஜூன்-மாதம் 24-ந்தேதி முதல் கான்பரேன்ஸ் பைனல் நோட்டீஸ் வெளியிடுவதற்கு முன் வரையில் உண்டான வரவு செலவு கணக்கு விபரம்.

—:*:—

### சப்கமிட்டி

### வரவு விபரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மதரூஸ் ராயபுரம் | ரூ | 40—0 | சங்கரன் கோயில் | ரூ | 25—0 |
| கோயிலாங் குளம் | ரூ | 25—0 | ராஜபாளையம் | ரூ | 20—0 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | ரூ | 10—0 | வாசுதேவநல்லூர் | ரூ | 10—0 |
| இலுப்பையூர் | ரூ | 10—0 | பனையூர் | ரூ | 10—0 |
| லிங்காபுரம் | ரூ | 7—8 | கோயிலாபுரம் | ரூ | 7—0 |
| மறவர்பெருங்குடி | ரூ | 7—0 | பாலியம்பட்டி | ரூ | 6—0 |
| கோட்டப்பட்டி | ரூ | 5—0 | தம்பிசின்னம்பட்டி | ரூ | 5—0 |
| முடிமன்னார்கோட் | ரூ | 5—0 | திருமங்கலம் | ரூ | 5—0 |
| தளவாய்புரம் | ரூ | 4—0 | வடுகபட்டி | ரூ | 2—0 |
| மகராஜபுரம் | ரூ | 0—8 | ஆக | ரூ | 204—0 |

### செலவின் விபரம்.

| | |
|---|---|
| கான்பரென்ஸ் விஷயமாய் 167-கிராமங்களுக்கும் குலாபிமானி வெ. ப. வெ. சுற்றுப்பிரயாணம் செய்த வகையில் ரூ | 86—14 |
| மதுரையில் கூடிய ஆலோசனைக் கமிட்டி மீட்டிங்குக்கும், திருப்பரங்குன்றம மடத்திற்கூடிய சப் கமிட்டிக்கும் செலவு ரூ | 116—10 |
| ஆலோசனை மீட்டிங் நோட்டீஸ் சப்கமிட்டி நோட்டீஸ் டேப்ளிக்கட்டு ரசீதுப் புஸ்தகங்கள் ஸ்டாம்பு வகையறு உள்பட செலவு ரூ | 57—10 |
| ஆக ரூ | 261—2 |

## கான்பரென்ஸ் விஷயமாய் செலவான விபரம்.

| | | |
|---|---|---|
| பைனல் நோட்டீஸ், பெரிய நோட்டீஸ், வந்த ஜனோபசாரம், வரவேற்பு, ஸ்டாம்பு, டிக்கட்டு முதலியவைகளில ரூ | 118 | 0 |
| வாலண்டியர்களின் சகல செலவு | 105 | 8 |
| தொகை வசூலிக்கப்போனவர்களின் பிரயாண செலவு | 146 | 8 |
| இரண்டு கொட்டகைகளின் கண்டிராக்ட்டும் இடம் வாடகை யுள்பட | 334 | 15 |
| கொட்டகையின் அலங்காரம், பெஞ்சு நாற்காலி வாடகை. காவல் முதலியவைகளில் | 65 | 1 |
| கொடிகள், ஆர்ச், பேஜ், போர்டுகள் முதலியவை | 45 | 0 |
| மோட்டார் வாடகை முதலியவைகளில் | 44 | 12 |
| வாத்தியம் ... ... ... | 15 | 0 |
| கியாஸ்லைட் ... ... ... | 26 | 0 |
| புஷ்பமாலைகள் ... ... ... | 12 | 12 |
| போட்டோ ... ... ... | 20 | 0 |
| சமையல் பிராமணாள் ... ... | 85 | 0 |
| தண்ணீர் வண்டிக்கு ... ... | 22 | 0 |
| விறகுக்கு ... ... ... | 34 | 12 |
| பால் நெய் ... ... ... | 93 | 12 |
| நல்லெண்ணெய் ... ... ... | 36 | 0 |
| சவை, சீனி, காப்பிக்கொட்டை. ... | 110 | 0 |
| அரிசி, பருப்பு, காய்கறி, சில்லரை சாமான்களில் | 569 | 0 |
| சப்கமிட்டி செலவு 33வது பேஜ்ஜின்படிக்கு... | 261 | 2 |
| கான்பரென்ஸ் தீர்மானங்கள் ஸ்டாம்பு முதலாக | 87 | 4 |
| ஆக ரூ | 2232—6 | |
| வரவு | 1827—6 | |
| அதிக செலவு | 405—0 | |

# கன்பரென்ஸுக்காக தொகை வசூலான விபரம்.

## வரவு

| விபரம் | ரூ. | அ. | விபரம் | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| சங்கரன்கோவில் | 80 | 8 | தூத்துக்குடி | 58 | 0 |
| முத்துக்குமாரபுரம் | 50 | 0 | ராமசாமிபட்டி | 42 | 8 |
| போடிநாயக்கனூர் | 40 | 0 | கோவிலாங்குளம் | 33 | 0 |
| மகாராஜபுரம் | 34 | 0 | வடுகபட்டி | 31 | 0 |
| மானாமதுரை | 25 | 0 | அம்மாபட்டி | 33 | 8 |
| மல்லப்புரம் | 22 | 0 | தும்பிசின்னம்பட்டி | 21 | 0 |
| ராஜபாளையம் | 20 | 0 | ஸ்ரீவில்லிபுத்தூர் | 20 | 0 |
| ஜக்கம்பட்டி | 22 | 0 | புலிக்குத்தி | 21 | 0 |
| காமேகவுண்டம்பட்டி | 24 | 0 | சொக்கலிங்கபுரம் | 20 | 0 |
| சிவகெங்கை | 21 | 0 | இலுப்பையூர் | 20 | 0 |
| வெங்கிடேசலபுரம் | 25 | 0 | குண்டலப்பட்டி | 12 | 14 |
| கல்லுப்பட்டி | 14 | 0 | குளிப்பட்டி | 12 | 8 |
| திருப்பூர் | 10 | 0 | குல்பர்க்கா | 10 | 0 |
| ஜக்கமநாயக்கம்பட்டி | 15 | 0 | ம, மீனாட்சிபுரம் | 15 | 0 |
| கருசக்குளம் | 14 | 0 | பாலையம்பட்டி | 11 | 0 |
| பேரையூர் | 10 | 0 | கோயமுத்தூர் | 10 | 0 |
| நத்தம் | 13 | 8 | மறவர்பெருங்குடி | 10 | 0 |
| தி. வடுகபட்டி | 10 | 0 | எலந்தகுளம் | 13 | 0 |
| சீலியம்பட்டி | 10 | 0 | சிலமலை | 10 | 0 |
| நிலக்கோட்டை | 18 | 0 | சிலுக்குவார்பட்டி | 11 | 0 |
| புத்தம்பட்டி | 15 | 0 | உசிலம்பட்டி | 10 | 0 |
| கர்ணசேர்வாரபம்பட்டி | 26 | 0 | கோயிலாபுரம் | 15 | 0 |
| ஆனைமலையம்பட்டி | 15 | 0 | கருநாகமுத்தம்பட்டி | 15 | 0 |
| கூடலூர் | 11 | 0 | சிறுநாக்கம்பட்டி | 10 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விருதுபட்டி. | 55 | 0 | மட்ட்ப்பரை | 3 | 8 |
| லிங்காபுரம் | 14 | 0 | மேட்டுப்பட்டி | 19 | 8 |
| கோடங்கிபட்டி. | 15 | 0 | புளியங்குடி | 10 | 0 |
| காஞ்சுரங்கால் | 10 | 0 | துணைமாலைப்பட்டி | 10 | 0 |
| குமுந்தாபுரம் | 11 | 0 | அணைப்பட்டி | 9 | 0 |
| வெள்ளையம்பாபுரம் | 7 | 0 | திருமங்கலம் | 5 | 8 |
| போளியகவுண்டம்பட்டி | 9 | 8 | சுத்தமடம் | 8 | 8 |
| உடையநாயகபுரம் | 5 | 8 | மதுரை | 1 | 0. |
| மல்லயம்பட்டி | 9 | 0 | காரியாபட்டி | 8 | 0 |
| நாராயணதேவம்பட்டி | 8 | 8 | வெள்ளையாபுரம் | 6 | 0 |
| சிப்பாலக்கோட்டை | 5 | 8 | சல்லிசெட்டிபட்டி | 9 | 8 |
| பெருநாளி | 9 | 0 | ஐயனூர்குளம் | 9 | 0 |
| முடிமன்னூர்கோட்டை | 5 | 0 | கண்டிதேவம்பட்டி | 7 | 8 |
| சோலைமலைட்ம்பட்டி | 3 | 8 | மார்க்கயங்கோட்டை | 3 | 8 |
| கரியணம்பட்டி | 4 | 8 | சிந்திலச்சேரி | 4 | 0 |
| குண்டலகுத்து | 4 | 0 | காளக்குடி | 3 | 8 |
| வாசுதேவநல்லூர் | 4 | 8 | குள்ளிசெட்டிபட்டி | 1 | 8 |
| புதூர் | 2 | 0 | வடவலாபுரம் | 1 | 8 |
| சேதுபுரம் | 2 | 0 | சோளவந்தான் | 3 | 0 |

| | | |
|---|---|---|
| சப்கமிட்டி வரவு 33-வது பேஜின்படி ரூ | 204 | 0 |
| ஹாலில் டிக்கட்டுகள் வித்த வகையில் ரூ | 304 | 0 |
| ஆக வரவு ரூ | 1827 | 6 |

அதிகம் செலவான 405-ரூபாயும், விருதுபட்டி தெ. சு. கருப்பஞ்செட்டியார், R P. அழகிரிசெட்டியார், கொ. பெ. தேவராண்டி செட்டியார், கொ. கந்தஞ் செட்டியார் இந்நால்வர்களாலும் வீதாச்சாரமாய் இப்போது செலவு செய்யப்பட்டது. இத்தொகையை 167-கிராமங்களில் தலைக்கட்டுவரி பாக்கியிருப்பதை இவர்கள் வசூலித்து ஈடு செய்துகொள்வது.

கோயமுத்தூர் சொப்பியவர் கோத்திரம்,

வெ. பகவய்ய செட்டியார் குமாரரும்,

பரமபாகவதர் காளிந்திதாஸ் சுவாமிகள் சகோதரரும்,



நமது கான்பரென்ஸை முதன் முதல் கூட்டிவைத்தவருமான

வெ. ப. வெங்கிட்டராமன் செட்டியார் குலாபிமா

...ம்மி

அன்னமே கேளடி நம்மவர் சங்கத்தை
உன்னத மாகநா னோதி வாறேன்
இங்கித மாகவே சங்கம் பிறந்தது
ஈரெட்டு ஆ மூன்றாம் மாண்டு தன்னில்

உற்பத்தி யானது கோவை நகரத்தி
லாக்கம் ரெண்டாவது காஞ்சி புரம்
நாடெங்கும் பேரோங்க மூன்றாவது காடு
நம்மவர் வாழும் விருது பட்டி

இருபான் மூன்றாண்டு ஜனவரி மாதம்
இருபத்தி யெட்டாம் மாது வாரம
மகத்தவர் தங்கிய மாகாடு காணநம்
மினத்தவர் கூத்துமே சேர்ந் தார்கள்

குமரக்கோட்டம் யானை முன்னடக்க பலர்
கூடியே மோட்டா ருடன் செல்ல
சிங்கக்கொடி யுடன் தொண்டர் படைகளும்
சேர்ந்து வரும விந்தை பாரடியே

ஆனைகதே ரத மோடிடும் வீதிக
ளெண்பரச் சுற்றி பவனி வந்து
கெம்பீரமாகவே சங்கத் தலைவர் முன்
கட்டின வழியாக போ யமர்ந்தார்

கன்னியே பாரடி பாரசு பேட்டையில்
காணுது பார் நாடு கொட்டகையும
கிட்ட நெருங்கியே டிக்கட்டும் வாங்கமேணும்
கிழபுற வாயிலாம் போய் நுழைகதோம்

பந்தற் சிங்கார பலங்காரந் தோணுது
பாவையே நம்முன்றாண்டு சங்க மிது
பந்தி பந்தயாக் குந்தி யிருக்கின்ற
விந்தையைப் பாரடி பெண் ணரசே.

ஆனந்த மிக்க கான்பிரென்ஸ் ஸானது
ஆசிமேயான சொப்பிய வார் கோத்திரம்
கோவை நாகுல அபிமானி வேங்கட
ன்னன் பாரிக் குவல் பதத்தே